


# ஓடிசம் குழந்தைகளும் அவர்களது குடும்பமும்

அத்தியாயம் 09

ஒரு பிள்ளை Autism என்று கண்டறியப்பட்டவுடன் அல்லது அவ்வாறு இனம் காணப்படாது அந்தப்பிள்ளையின் பழக்கவழக்கங்களில் (Behaviours) இல் பலவிதமான மாறுபாடான செயற்பாடுகள் காணப்படுகின்ற போது, பெற்றோர் மனம் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றது மாத்திரமின்றி ஏன் இப்படி நடந்தது, ஏன் இறைவன் எங்களுக்கு இவ்வாறான குழந்தையை கொடுத்தார்? நாம் என்ன பாவம் செய்தோம்? என்ன காரணம்? இவ்வாறான குழந்தை பிறப்பதற்கு என்று குழப்பம் அடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இங்கு இவர்கள் முக்கியமான ஒன்றை சிந்திக்க வேண்டும். ஓடிசம் குழந்தைகள் பிறப்பதற்குரிய பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்ற போதிலும் சரியான காரணம் இதுவரைக்கும் யாருக்கும் தெரியாது. இவ்வாறான பிள்ளைகள் யாருக்கும், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பிறக்கலாம். எனவே இவர்களுக்குத் தான், அவர்களுக்குத்தான் பிறக்கும் என்ற நியதி ஒன்றும் இல்லை. இவ்வாறான பிள்ளைகள் ஏன் பிறந்தார்கள் என்று சிந்தித்து காலத்தை வீணடிப்பதை விட்டு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை சிந்திப்பதே சிறந்தது.

அதாவது வாழ்வெனும் புத்தகத்தில் நேற்று என்கிற பக்கம் புரட்டப்பட்டுவிட்டது. நாளை என்ற பக்கம் வெற்றாக உள்ளது.



இன்று என்பது எழுதப்படுகிறது. உங்களால் முடிந்தவரை மிகச் சிறந்ததையே எழுதுங்கள். காரணம் இந்த புத்தகத்தில் அழிப்பானை (Eraser) இப் பயன்படுத்த முடியாது.

ஓடிசம் குழந்தைகள் கை, கால் சொத்தியாக வலது குறைந்து பிறக்கவில்லை. உருவத்தில் எந்த வித மாற்றங்களும் இல்லை. சாதாரண குழந்தைகள் போல் இருப்பார்கள். மேலும் சொல்வதானால் சாதாரண குழந்தைகளை பார்க்கிலும் அழகானவர்களாக இருப்பார்கள். ஆனால் இவர்களது பழக்கவழக்கங்களிலும் (Behaviours) பேச்சுத்திறனிலுமே முக்கியமாக பிரச்சினைகள் காணப்படுகின்றன. இங்கு பேச்சுத் திறன் என்னும் போது இவர்கள் ஊமை யல்ல. காது கேட்காதவர்கள் அல்ல. எல்லாவற்றிலும் சாதாரணமா கவே காணப்படுவர்.

அதாவது இப்பிள்ளைகளுக்கு எந்தவிதமான பரிசோதனை (Investigation Test)

செய்து பார்த்தாலும் எல்லாம் சாதாரணமாகவே காணப்படும்.

எனவே பெற்றோர்களாகிய உங்களது விடா முயற்சியும், பொறுமையும், தன்னம்பிக்கையும், மன உறுதியுமே உங்கள் பிள்ளைகளின் எதிர் காலத்தை நல்லதாக மாற்றக்கூடிய அடிப்ப டைக் காரணிகளாகும். எத்தனையோ பேர் எதை எதையோ சொல்லி உங்கள் தன்னம்பிக்கை யையும், முயற்சியையும் மலுங்கடிக்கலாம். ஒன்றை மட்டும் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.



யார் என்ன சொன்னாலும் பொறுமை யாக எல்லாவற்றையும் கேளுங்கள். அவற் றில் நல்லவையும் இருக்கலாம். கெட்ட வையும் இருக்கலாம். எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து இறுதியாக முடிவெடுக்க வேண்டிய வர்கள் நீங்களாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் இது உங்கள் பிள்ளையின் வாழ்க் கைப் பிரச்சினை. சொல்பவர்கள் யாரும் நீங் களோ உங்கள் பிள்ளையோ கஷ்டப்படும்போது உதவப் போவதில்லை.

எனவே பெற்றோர்களாகிய நீங்கள் திடமாக இருக்கவேண்டும். எனது பிள்ளைக்கு எந்தவித மான குறைபாடுகளும் இல்லை. நிச்சயமாக எனது பிள்ளையையும் நாளடைவில் சாதாரண நிலைமைக்கு என்னால் மாற்ற முடியும் என்ற மன உறுதி இருந்தால் போதும். நிச்சயமாக அது நியாய மாகமாறி விடும்.



''எதனை நினைக்கின் றாயோ அதுவாகவே ஆகி றாய்'' என்பது முழு உண்மை அல்ல. நினை ப்பு நிஜ நினைப்பாக இருக்க வேண்டும். ஆழ்ந்த நினைப்பு, அசை யாத நினைப்பு, வலிய நினைப்பு, மாறாத நினைப்பு விரை வில் உலகம் அறியத்தக்க வெளி உண்மையாக மாறிவிடும் என்று தனது கட்டுரையில் கூறியுள்ளார் பார தியார். (நன்றி - பாரதியார் கட்டுரை களஞ்சி யம்) மனதில் சக்தியை கண்டுபிடித்த வில்லி யம் ஜேம்ஸ் முன்னூறு பக்கங்களில் சொன்ன உண்மைகளை நமது பாரதியார் 27 வார்த்தை களில் சொல்லியுள்ளார். இந்த வார்த்தைகளை திரும்ப திரும்ப படித்து பாருங்கள் சக்தி பெருகும்.

இந்தப் பூவுலகில் உள்ள அனைவரும் முன் னேர வேண்டும். அதற்காக ஒவ்வொரு தனி மனிதனும் தனித்தனியாகத் தான் முயற்சி செய்ய வேண்டும். அப்படி முன்னேற விரும்பும் ஒவ்வொருவரும் சிந்திக்கக் கூடாத இரு வார்த் தைகள் உள்ளன. அந்த வார்த்தைகளை அடிக் கடி நினைத்தால் நாம், அதுவாகி முயற்சி செய் யாமலேயே இருந்து விடுவோம். அந்த இரு வார்த்தைகள், ''முடியாது'', ''தலைவிதி'' ஆகிய வையே.

தவிர்க்க வேண்டிய இருவார்த்தைகளை தவிர்த்து நிஜமான நம்பிக்கையும் ''வெற்றி வெற்றி'' என்று உறுதியுடன் ஒவ்வொரு அடி யையும் எடுத்து வைத்து இந்த நொடி முதல் வாழ ஆரம்பியுங்கள். இது எமது மனதுக்கு உள்ள அரிய சக்தி.

**web:www.osilmo.com**

(தொடரும்)